புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் துறை
ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்
திருநள்ளாறு

எண்: நிஅ(கோ)/பி1/ஸ்ரீதசுதே/திருநள்ளாறு/2025-26/ 16

தேதி: 07.01.2026

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானத்தின் சார்பாக முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்கண்ட பணிகளுக்காக, அனுபவமுள்ள, காரைக்கால் நகராட்சியில் பயனாளர் கட்டணம் (USER CHARGE) செலுத்திவரும் நிறுவனம் / நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

வேலையின் விபரம்:

1. நளதீர்த்தத்தை சுற்றி அமைந்துள்ள மூன்று கழிவறைகளின் செப்டிக் டேங்க் (மூன்று எண்ணிக்கை) சுத்தம் செய்தல். — 3.00 எண்ணிக்கை
2. திருநள்ளாறு, வடக்கு வீதியில் அமைந்துள்ள வரிசை வளாகம் கழிவறை செப்டிக் டேங்க் (ஒன்று) சுத்தம் செய்தல். — 1.00 எண்ணிக்கை
3. திருநள்ளாறு, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ள கழிவறை செப்டிக் டேங்க் (இரண்டு எண்ணிக்கை) சுத்தம் செய்தல். — 2.00 எண்ணிக்கை
4. திருநள்ளாறு, வடக்கு உள்வட்ட சாலை மற்றும் நளதீர்த்தத்தம்ரோடு சந்திப்பில் அமைந்துள்ள கழிவறைகளின் செப்டிக் டேங்க் (ஒன்று) சுத்தம் செய்தல். — 1.00 எண்ணிக்கை
5. திருநள்ளாறு, வடக்கு உள்வட்ட சாலை மற்றும் சுப்புராயபுரம் ரோடு சந்திப்பில் அமைந்துள்ள கழிவறைகளின் செப்டிக் டேங்க் (ஒன்று) சுத்தம் செய்தல். — 1.00 எண்ணிக்கை
6. திருநள்ளாறு, கீழ அக்ரஹாரத்தில் அமைந்துள்ள ஊழியர்கள் குடியிருப்பின் கழிவறைகளின் செப்டிக் டேங்க் (ஒன்று) சுத்தம் செய்தல். — 1.00 எண்ணிக்கை
7. மேற்கூறியவை அல்லாமல் தேவஸ்தானத்தின் ஏனய இடங்களின் கழிவறைகளின் செப்டிக் டேங்குகளையும், சனிப்பெயர்ச்சி விழா போன்ற விசேஷ காலங்களில் அமைக்கப்படும் தற்காலிக கழிவறைகளின் செப்டிக் டேங்குகளையும் தேவைக்கேற்ப சுத்தம் செய்ய லோடு ஒன்றிற்கான (5000 லிட்டர் கொள்ளளவு) தொகையினை தனியாகக் குறிப்பிட வேண்டும்.

| | |
|---|---|
| ஒப்பந்தகாலம் | : 01.02.2026 முதல் 31.01.2027 (ஒரு வருட காலம்) |
| ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் | : 23.01.2026 மாலை 3.30 மணி |
| ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் தேதி மற்றும் நேரம் | : 23.01.2026 மாலை 4.00 மணி |
| டேவணித்தொகை | : ரூ. 10,000/- |

ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1. மேற்கண்ட பணிகளுக்கு தனித்தனியாக கழிவறை செப்டிக் டேங்க் சுத்தம் செய்ய தனித்தனியாகக் குறிப்பிட வேண்டும். மேற்கண்ட பணிகள் அனைத்தும் (Sewage cleaning compressor Tanker) வாயிலாக சுத்தம் செய்யப்பட வேண்டும். ஆட்களைக் கொண்டு சுத்தம் செய்யக் கூடாது. குறைந்தபட்ச தொகை கோரும் ஒப்பந்ததாரருக்கு பணிஆணை வழங்கப்படும். ஒவ்வொரு வேலைக்கும் குறைந்தபட்ச தொகையை கணக்கிட்டு தனித்தனியாக பணிஆணை வழங்கப்படும்.

2. மேற்கண்ட செப்டிக் டேங்கில் சுத்தம் செய்ததை காரைக்கால் நகராட்சி, Compost yard- க்கு கொண்டு சென்று வெளியேற்ற வேண்டும். வேறு எந்த இடத்திலும் வெளியேற்ற கூடாது. Compost yard- ல் கொண்டு சென்று வெளியேற்ற, அதற்காக நகராட்சியில் பணம் செலுத்தி அனுமதி பெறப்பட்ட ரசீதினை (USER CHARGE RECIPT) ஒப்பந்தப்புள்ளிடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும். மேலும் காரைக்கால் நகராட்சி, Compost yard - ல் கொண்டு சென்று வெளியேற்றாமல் வேறு இடத்தில் கொட்டுவது தெரிய வந்தால், அபராதத்தொகையாக ரூ. 2,000/- ஒப்பந்தத்தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும்.
3. கழிவறை செப்டிக் டேங்க் சுத்தம் செய்த கழிவுநீரை Compost yard- ல் வெளியேற்றம் செய்யப்பட்டதற்கான, காரைக்கால் நகராட்சியில் பெறப்பட்ட ஒப்புகை ரசீதினை தேவஸ்தானத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த ஒப்புகை ரசீதினைக் கொண்டுதான் ஒப்பந்ததாரருக்கு தேவஸ்தான நிர்வாகத்தினரால் பணம் பட்டுவாடா செய்யப்படும். மாதம் ஒரு முறைதான் பணம் பட்டுவாடா செய்யப்படும். எக்காரணம் கொண்டும் முன்பணம் வழங்கப்படமாட்டாது.
4. ஒப்பந்தப்புள்ளியினை, பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவை அச்சடிக்கப்பட்ட கடித தாளில் (Printed Letter Pad) தெளிவாகக் குறிப்பிட வேண்டும். இத்தேவஸ்தானத்தினால் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அதற்கான தொகையை எண்ணால் மற்றும் எழுத்தால், அச்சடிக்கப்பட்ட கடித தாளில் (Printed Letter Pad) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
5. அனைத்து கழிவறை செப்டிக் டேங்க்குகள் நிரம்பிய பிறகு சுத்தம் செய்யாமல் கால இடைவெளிகளில் எடுத்து கழிவறை உபயோகத்திற்கு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் கழிவறை பக்தர்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் இருக்கக்கூடாது. அப்படி புகார்கள் வந்தால் அதற்காக அபராதம் ஒரு தடவைக்கு ரூ. 1000/- வீதம் பணம் பிடித்தம் செய்யப்படும். இந்த அபராதம் ஐந்து முறை விதிக்கப்பட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு டேவணித்தொகையினை இழக்க நேரிடும்.
6. மேற்கண்ட பணிகளுக்கு தேவஸ்தானத்திலிருந்து எந்தவித பொருட்களும் கொடுக்கப்பட மாட்டாது. கழிவறை செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும்பொழுது பக்தர்களுக்கு இடையூறாக இல்லாமல் அதற்கான Chemical உபயோகப்படுத்தி சுற்றுச்சூழலுக்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
7. பணிகள் திருப்திகரமாக பூர்த்தி ஆனபிறகே மாத இறுதியில் பணம் பட்டுவாடா செய்யப்படும். ஒவ்வொரு முறையும் கழிவறை செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும்பொழுது அந்தந்த பொறுப்பாளர்கள் பராமரிக்கும் பதிவேடுகளில் கையொப்பம் இடவேண்டும். பணிகள் செய்யப்பட்டதை கணக்கிட்டு பணம் பட்டுவாடா செய்யப்படும்.
8. டேவணித்தொகை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில், “நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு” என்ற பெயரில் பெறப்பட்ட வங்கி வரைவோலையாக இணைக்கப்பட வேண்டும். டேவணித்தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். ஒப்பந்தகாலம் நிறைவடைந்த உடன் டேவணித்தொகை ஒப்பந்ததாரருக்கு திரும்ப அளிக்கப்படும்.
9. எந்தவித தவிர்க்க முடியாத கட்டுப்பாட்டினாலோ (Force Majeure), அரசின் கொள்கை முடிவுகளாலோ இந்த ஒப்பந்தத்தில் ஏதேனும் இடற்பாடு ஏற்பட்டால், ஒப்பந்ததாருக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்கப்பட மாட்டாது.
10. மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியை ஏற்கவோ, நிராகரிக்கவோ, தேவஸ்தான நிர்வாக அதிகாரிக்கு முழு உரிமையுண்டு. அவரின் தீர்ப்பே இறுதியானது.

7/1/26
நிர்வாக அதிகாரி

அலுவலக அறிவிப்பு பலகை:

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால் - மற்றும் தனி அதிகாரி, ஸ்ரீதகதே, திருநள்ளாறு.
2. கண்காணிப்பு பொறியாளர், வட்டம் - III, பொதுப்பணி துறை, காரைக்கால்.
3. ஆணையர், நகராட்சி அலுவலகம், காரைக்கால்.
4. ஆணையர், கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகம், திருநள்ளாறு/ நெடுங்காடு/ கோட்டுச்சேரி/ நிரவி/ திரு-பட்டினம்.
5. அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானம், அம்பகரத்தூர்.
6. தேவஸ்தான வலைதளம்
7. தேவஸ்தான அறிவிப்பு பலகை